முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.113/2019**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 20.07.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 20.07.2026 | சாட்சி | வா.சா.1 |
| பெயர். | பாலு | வயது.. | 40 |
| தந்தை பெயர். | தங்கவேல் | கிராமம்.. | புவனகிரி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. நான் வாதி சேகர் சார்பாக சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு வாதி உடன் பிறந்த சகோதரர். சேகர் விவசாயம் கிராமத்தில் பார்த்துக்கொண்டிருக்கிறார். கீழ்புவனகிரியில் இருக்கும் வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் இராமநாதனுக்கு பாத்தியம். இராமநாதனுக்கு 3 மகன்கள் கருணாகரன், பாலசுப்பிரமணியன், சிவக்குமார். இராமநாதன் 2006 இல் இறந்துவிட்டார். இராமநாதன் குடும்பத்திற்கு ஊரில் மொத்தமாக எவ்வளவு சொத்து இருக்கும் என்றால் தெரியாது. நான் கீழ்புவனகிரியில் வசிக்கிறேன். இராமநாதன் மகன்களுக்கு இடையில் பாகப்பிரிவினை நடந்துவிட்டது. அந்த பாகப்பரிவினை பத்திரம் பதிவு செய்யப்பட்டதா என்றால் தெரியவில்லை. பாக அட்டவணை போட்டு பிரித்துக்கொண்டார்களா என்ற விபரம் தெரியாது.

2. இராமநாதன் கீழ்புவனகிரியில் தான் வசித்து வந்தார். இராமநாதனக்கு சின்னப்பா முதலி தெருவில் வீடு உள்ளது. இராமநாதன் உயிருடன் இருக்கம் பொழுதே பாகப்பிரிவினை நடந்துவிட்டது. பாலசுப்பிரமணியன், கருணாகரன், சிவக்குமார் மூவருமே சென்னையில் வசிக்கிறார் அவர்களை பற்றிய விபரம் தெரியாது. கருணாகரன் மட்டும் என்னுடன் தொடர்பில் இருக்கிறார். கருணாகரன் real estate முன்பு சென்னையில் செய்துக்கொண்டிருந்தார். முன்பு கீழ்புவனகிரியில் விவசாயம் பார்த்தார். பாகப்பிரிவினைப்படி எவ்வளவு இடம் மூவருக்கும் பிரிக்கப்பட்டது என்று தெரியாது, மொத்தமாக அவர்களுக்கு எவ்வளவு சொத்து

இருந்தது என்பது பற்றியும் தெரியாது. இராமநாதன் மற்றும் அவரின் மகன்கள் பயிரிடும் வரை அவர்கள் தான் பயிர் செய்து வந்தார்கள், மூன்று சகோதர்களும் கீழ்புவனகிரியில் இருக்கும் சொத்துக்களை விற்று விட்டு சென்று விட்டார்கள் என்றால் சரிதான், கடைசியாக சொத்துக்களை கேசவனிடம் விற்றார்கள். எவ்வளவு சொத்துக்கள் கேசவனிடம் விற்றார்கள் என்று தெரியாது.

3. கேசவன் கிரயம் வாங்கியது போன்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. கேசவன் சொந்த ஊர் தெரியாது. கிரயம் வாங்கிய பிறகு தான் கேசவனை தெரியும் என்றால் சரிதான். கேசவனுக்கு கீழ்புவனிகிரியில் வேறு சொத்து உள்ளதா என்பதை பற்றி தெரியாது. கேசவன் கிரயம் பெற்ற சொத்துக்கள் இராமநாதனுக்கு பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான்.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-.S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.